# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூச] யாழ்ப்பாணம்:- நந்தன வரு கார்த்திகை மீ கஎ உ செவ்வாய்க்கிழமை (2 Dec. 1952) [இல - சூச]


# கச்சான் காற்றின் கடுங் கோபம்!

## கமக்காரர் கண்ணீரும் கம்பலையும் ஆயினர்!!

## பயிரழிவு பார்க்கப் பரிதாபம்!!!

**பலவாண்டுகளுக்குப் பின் இம் முறை நன் மழை பெய்துவருகின்றதென யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ளவர்கள் இதயம் மலரும் இவ்வேளையில் மின்னெனத் தோன்றிய வேகமான காற்று விளைவித்த இன்னலோ சொல்லுக்கடங்காதது!**

பலாக்கள் பாறி விழுந்தன வென்றால், பல்லாயிரக் கணக்கான வாழைகள் வகைமோசமாக விழுந்தன. வீதிகளிற் பாரிய மரங்கள் பல சரிந்தன. பனைகள் முறிந்தன. வீடுகள் கொட்டில்கள் பழுதடைந்தன.

போக்கு வரத்து, புகையிரதமென்றாலென்ன, மோட்டார் இரதம் என்றால் என்ன, ஒழுங்கீனமாய் விட்டது.

சனிக்கிழமை இரவு தொடங்கிய இந்தப் புயற்காற்று ஞாயிற்றுக்கிழமை பொழுதுமறையும் வரையும் கூடிக் கொண்டே வீசியதுமல்லாமல் இடைவிடாது மழையும் பெய்த வண்ணமாகவே இருந்தது.

காவற்குழிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே தந்திக் கம்பிகள் முரிந்தமையாற் புகையிரதப் போக்குத் தடையானது.

பொருள் நட்டம் இப்பொழுதிருக்கிற நிலைமையில் மிகப் பெரிதெனவே சொல்லவேண்டும்!

வாழைத் தோட்டக் கமக்காரர் மனங்கலங்கிச் செய்வதறியாது திகைக்கின்றனர்!

## அன்பும் தூய்மையும் அழகைக் கொடுக்கும்!

### வடமராட்சியில் யோகிகள்கூற்று

—0—

வட ராட்சி இந்துமகளிர் கல்லூரியிலே சுவாமிகள் பேசும்பொழுது பெண்கள் சமயத்தையும் விஞ்ஞானத்தையும் படித்து அரிய செயல்களைச் செய்ய வேண்டும். தங்க நகைகள் அழகைக் கொடுக்க மாட்டா! அன்பு தூய்மை ஆகிய அணிகலன்களே அழகைக் கொடுக்கும். பெண்கள் மஞ்சள் பூசும் வழக்கத்தை மேற்கொள்ளவேண்டும் என்று கூறினர்.

## நீளநின்று தொழுமின்!

திருச்சிற்றம்பலம்.

நீளநின்றுதொழுமினித்தலுநீதியால்
ஆளுநம்மவினைகளல்கிமழிந்திடத்
தோழுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே.

திருச்சிற்றம்பலம்.

## சாராயம்ஒழிந்தால் நிலைமைசீரடையும்!

### சாவகச்சேரியில் மது நீக்க முயற்சிகள்

சென்ற வியாழக்கிழமை 28-11-52 மாலை 7 மணியளவில் சாவகச்சேரி இத்தியடிப் பிள்ளையார் கோயில் வீதியிலே திரு. N. அருணாசலம் அவர்கள் தலைமையில் ஓர் பகிரங்க சாராயநீக்க ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

அத்தருணம் திரு. K. பேரம்பலம் அவர்கள் சாராய நீக்கத்தால் சமூகத்தின் உண்டாகக் கூடிய பொருளாதார விருத்தியைப்பற்றியும், மதுவிலக்கு மகாசபைக் காரியதரிசி திரு. K. நவரத்தினம் அவர்கள் அரசாங்கமே சாராய ஆக்க விருத்தியை ஆதரிக்கிறது. சாராயத்தை நாட்டிலே நிலைநாட்டுவதற்கு தென்னிலங்கையர் வடஇலங்கைக்கு வருவார்களாம். சாராய நீக்கத்துக்குத் தொண்டுசெய்யும் எம்மைப் போற்றவேண்டியிருப்பினும் பலர் தூற்றுகிறார்கள். சாராய நீக்கம் பொருளாதார விருத்தியோடு வாழ்க்கையில் இன்பத் தருவதாகிய ஒழுக்கநெறியைத் தரும், என்று பல எடுத்துக் காட்டுகளாலும் புள்ளி விபரங்களாலும் விளக்கிப் பேசினார்கள்.

திரு. ச. தியாகராசா அவர்கள் தமிழ் மக்களின் பழைய உயர்வு மதிப்புக்களையும் இன்றைய தாழ்வு அவமதிப்புக்களையும். மேல்நாட்டார் ஆட்சியால உண்டான தீயவிளைவுகளையும் மதுபானம் உண்டாக்கும் மதிகேட்டையும் தமிழ் மக்கள் தங்கள் நிலைமையைத் திருத்தியமைக்க வேண்டியவைதயும் விளக்கிச் சாராய நீக்கத்துக்கு ஒவ்வொருவரும் உழைக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள,

த. திரு. குமாரசுவாமிப்புலவரவர்கள், பொருளாதார வாழ்க்கை, சமய வாழ்க்கை விருத்திகளுக்குச் சாராய நீக்கம் செய்ய வேண்டிய தேவையை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# உலகம் உய்யத் திருக்குறள் நெறி நிலவவேண்டும்

## தமிழ்மறைக் கழகம் ஆரம்பம்

உலகம் உய்யவும் தமிழினம் சிறந்தோங்கவும் திருக்குறள் என்னும் தெய்வ நூலின் பெருமையை மக்கள் யாவரும் அறிதலும், அது இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்பமடையும் நெறியைக் கூறுகின்றதென்பதை உணர்த்தவும், அது வகுத்த நெறியில் ஒழுகுதலும் இன்றியமையாதன. இவற்றை மக்களிடையே உண்டாக்குவதற்கு ஒல்லும் வகையாற் பணியாற்றத் "தமிழ் மறைக் கழகம்" என்னும் பெயருடன் ஒரு கழகத்தை நிறுவல் வேண்டுமென அன்பர் சிலரும் யானும் முடிவு செய்தனோம். என்று பண்டிதர் வித்துவான் கா. பொ. இரத்தினம் M. A. B A L அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தையில் தமிழ் மறைக் கழகத் தொடக்கக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசியபோது குறிப்பிட்டார்கள்.

மக்கள் யாவரையும் திருக்குறளில் ஈடுபடச் செய்தலுக்கும், அது காட்டும் வழியில் யாவரும் வாழுதற்கு வேண்டியன செய்தலுக்கும் பின்வரும் ஆக்க வேலைகளைச் செய்தல் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சொற்பொழிவுகள், வகுப்புகள் நடத்தல், திருக்குறள் மகாநாடுகளை நடத்தல், ஊர்தோறும் திருவள்ளுவர் இல்லங்களை அமைத்தல், திருக்குறளையும் உரையையும் அச்சிட்டு அடக்க விலைக்கு விற்றல், திருக்குறளில் பற்றுண்டாவதற்குத் தேர்வுகள் நடாத்தல், பரிசில்கள் வழங்குதல் முதலியன.

பின்வரும் அலுவலாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- பண்டிதர் வித்துவான் கா. பொ. இரத்தினம் M. A; B. O. L அவர்கள், செயலாளர்:- திரு. இ. சி. சோதிநாதன் அவர்கள், துணைச் செயலாளர்:- பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள், பொருளாளர்:- பண்டிதர் மு. ஆறுமுகன் அவர்கள் ஆட்சிமன்ற உறுப்பாளராக திருவாளர்கள் டி. எஸ். சிவநாயகம், கே. வி. செல்வத்துரை, பண்டிதர் பொ. கந்தையனார், வித்துவான் எஸ். சபாபதிப்பிள்ளை, திருவாளர் கா. பா. பாலச்சந்திரன் என்போர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தமிழ்மறைக் கழகத்தின் முதற் திருக்குறள் மகாநாட்டைத் திரிகோணமலையில் அடுத்த வருட முதற்பகுதியில் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

# கண்ட பாவனையிலே தொண்டா?

## சமயம் வளர்க்க வழி எது?

இலங்கை மக்கள் வாழ்க்கையில் அவசியமெனக் கருதி நம் அரசாங்கத்தார் சமய பாடத்தையும் பாடசாலைக் கல்வித் திட்டத்திற் புகுத்தியுள்ளனர். நம சூழலைக் கவனிக்கும்போது சமயமென்ப தொன்று உண்டோ என ஐயமுண்டாகின்றது. சமயத்தின் பேரால் செய்யப்படும் புறக் கிரியைகள் பல காணலாம்; ஆனால் சமய நெறியில் வாழ்வோரைக் காண்பது அபூர்வம். பட்டின வாழ்வில், அல்லது அதன் வாசனை கமழும் இடங்களில் இந்நிலை நன்கு விளங்குகின்றது. ஓர் உதாரணம் காண்போம். சுதந்திரம் வந்தபின் நம் பெரிய மனிதர் பலர் சமயப் பற்றுக் கொள்தலை எவரும் காண்கின்றனர். திருக்கோணமலை விக்கிரகங்கள் தேசம் சுற்றிப் பார்க்க எழுந்தன. பிரதமர் முதல் நகராண்மைக் கழகத் தலைவர்கள் மாகாணாதிபதிகள் வரை சகலரும் பங்குபற்றினர். தோரணங்கள் பொலிந்தன. பட்டுக்கள் சாத்தப்பட்டன. தீபாலங்காரங்களும் வீடுதோறும், வீதிதோறும் மின்சாரக் குமிழ்களும் கண்ணைப் பறித்தன. பத்தியெனும் பிரவாகம் தெருவெல்லாம் பெருக்கெடுத்தோடும் என எதிர்பார்த்தோம். சனசமுத்திரம்

**"தம்பி"**
**— நாரந்தனை —**

ஆடம்பரமாக ஆர்ப்பரித்து எழுந்ததைக் கண்டோம். வேடிக்கை பார்ப்போர் திருக்கூட்டத்தைக் கண்டோம். பத்தர்கள் ஒருவர் இருவரையாவது ஆயிரம் ஆயிரம் பேரிடையே கண்டிலோம். மறத் தமிழ்க் கண்ணகி சிலைக்கு இமயத்திற் கல்லெடுத்து வந்த வந்த செங்குட்டுவனைப் பற்றிக் கேள்வியுற்றதினால் [illegible] மவரும் சமயத்தொண்டின் பெயரால் இத் திருக்கூத்தை ஆரம்பித்தனர் இதனால் பலன் சிறிதுமில்லை என நாம் கூறவில்லை. உண்மையான பயன் பெற்றோர் வெகுசிலரே குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்டோரே பலர் என்பதையே வற்புறுத்துகிறோம்.

இந்நிலைமையில் சமயத்துக்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைப் பற்றி விசாரிப்பதே வீண் எனப் பலருக்குத் தோன்றலாம். 'சமயத்தைப் பார்த்துக்கொள்ளத் தானே வரிகொடுத்துப் பூசாரியை வைத்திருக்கிறோம்; கோவிலில் சமயத்துக்கு இல்லம் அமைத்திருக்கிறோம்; எமக்கு ஏன் அதில் அக்கறை? எம் அலுவலைப் பார்ப்போம், என்பது பலருடைய அபிப்பிராயம் இன்று பரவுகின்றது. இது சரிதானா? இந் நிலைமையைத் திருத்தி யமைப்பதற்கு எம்மவர் உடனே தொடங்க வேண்டாமா? அறிஞர்களே சிந்தியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ கார்த்திகை மீ ௧௭ உ செவ்வாய்க்கிழமை

## பயிரழிவுக்குப் பரிகாரம்

ஒன்றில் மாரி மறுத்தல் அல்லது வெள்ளம் பெருக்கெடுத்தல் என்ற வகையிலே யாழ் நாடு இருந்து வருகிறதென்ற கவலை ஒழிந்துவிட்டதெனக் கால மழையைக் கண்டு களிப்பெய்திவரும்போது, என்றுமிராத கொடுங் காற்று கடும் வேகமாக வீசிக் குடாநாட்டை அல்லோல கல்லோலப் படுத்தி விட்டதைக் கண்ணுற் கண்டவர்கள் கண்ணீர் விடாதென்செய்வர்! உயிர்ச்சேதமும் பொருளழிவுமென்றால் உண்மையில் உரைக்கடங்காப் பேரிடர் என்றே சொல்லவேண்டும்!

ஆற்றக்கூடிய சத்திக்கப்பாற்பட்ட காற்றின் வீச்சு யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கிராமங்களையெல்லாம் தாக்கி மனித வர்க்கத்தையும் விலங்கினத்தையும் தாவரங்களையும் நிலைதடுமாறச் செய்ததென்றால் அதனால் விளைந்த நட்டம் எத்துணைத்தென் றெடுத்துணர்த்தவும் வேண்டுங்கொல்.

பனை மரங்கள் விழுந்து மக்கள் இறந்தார்கள், மிருகங்கள் அழிந்தன என்றறிகின்றோம். இப் பரிதாபத்துக்கு இனிச் செய்யும் பரிகாரம் எதுவுமில்லை.

ஆனால் கமக்காரர்களின் நிலைமையை உற்று நோக்கினால் இவர்களுக்கு எவ்விதத்தில் இடு கொடுத்தாலும் பழையபடி பயிரிட்டுப் பசிப்பிணி நீக்க முடியாதென்றே அறிந்தவர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள். மா, தென்னை முதலிய பயன் கொடுக்கும் மரங்கள் பல சாய்ந்துவிட்டன வென்றால் அந்த நட்டம் ஒருபுறம்; வாழைத் தோட்டங்கள் முற்றிலும் அற்றுப்போய் அமர்க்களத்தில் மடிந்துகிடக்கும் மனித உடம்புகள்போற் பல்லாயிரக் கணக்கான வாழைகள் நிலத்திலே தலைவணங்கின தன்மையாகக் கிடக்கின்ற நிலையை நினைக்கவே நெஞ்சம் அஞ்சுகின்றது; உடம்பு நடுங்குகின்றது. பருவம்வந்தன, குலையுள்ளன, பூவிரிந்தன, மட்டம் பெயர்ந்தன வென்றின்னனபலவும் காற்றின் சீற்றத்துக்காற்றாது மடிந்து பணிந்தன. பயிரிட்டவர்களின் பார்வைக்கும் உள்ளத் துணர்ச்சிக்கும் இந்தப் பரிதாப நிலையிலும் பிறிதொன்றுளதோ?

நிலத்தைப் பண்படுத்தி எருவிட்டுக் கொத்தி வெட்டிப் பயிரிட்டு வியர்வை சிந்தி வெயில் பனி மழையெலாம் காய்ந்து நனைந்து வாழ்க்கை நடத்த அரும் பாடுபட்டுப் பொருளும்- உதிரமும் - பொழுதும் முற்றுக அர்ப்பணஞ் செய்த காராளருக்கா — உலகத்துக்கு உணவளிக்கும் — உத்தம உழவர்களுக்கா— இந்த இன்னல்? ....

நல்லவர்கள் பொருட்டு நன் மழை பொழிவதுபோலப் பொல்லாதவர்கள் பொருட்டுப் பொருளழிவு விளைவதுபோலும்! பொல்லாங்கு மலிந்துவிட்டது போலும். நல்லன செய்வாரில்லைப்போலும். நெறியெலாம் இன்று மறமாய் மாறிவிட்டன போலும். அன்றேல் இத்துணைப் பேராபத்து விளையுமா?

இவ்வளவில், என்ன மாற்று மருந்து என்று ஆராய்ந்து நிலைமையைக் குணப்படுத்துவதே செய்யத் தக்கது.

தெய்வச் செயலாக நடைபெற்ற இந்த விபத்துக்குப் பரிகாரஞ் செய்யத் தனிப்பட்ட முறையில் எவராலும் முடியாது. அரசாங்கமும் பொது நலப் பணியாற்றும் நிலையங்களும் பொன்படைத்த நன்மக்களுமே துணைபுரியக்கூடியவர்கள். உதவி செய்யவேண்டியவர்கள். வீணுக்கும் வெறுமைக்கும் புகழுக்கும் பெருமைக்கும் அரும பொன்னையும அரிய பொழுதையும ஆற்றலையும் விரயஞ் செய்கின்ற மாபாதகத்தை ஒருவாறு ஒழிப்பதற்கே இந்த தெய்வ தண்டனை விதிக்கப்பட்டதென்றே நாம் நினைக்கின்றோம். எனவே இனிமேலாவது உடம்பை வருத்தி உதிரத்தைப் பிழிந்து உழைக்கின்றவர்களின் பொருளை வீண் வேடிக்கைகளுக்கு மடிப்பிச்சை கேட்கும் வழக்கத்தை இந்நாட்டவர்கள் ஒழித்துவிட்டு உண்ணவோ உடுக்கவோ உறங்கவோ வழியின்றித் தடுமாறி நிற்கும் ஏழைக் கமக்காரர்களுக்கு நேர்ந்த பேரிடரை ஒருவாறு நீக்க உழைப்பார்களாக.

அரசாங்கத்தார் கிராம முன்னேற்றம் எனறும், சனசமூக சேவையென்றும் அழகாகப் பேசிப் பணத்தை அவமே செலவு செய்தலையும் அயல் நடுகளுக்கும் பிறதேசங்களுக்கும் பிரதிநிதிகளை அமாவ முவு நடத்த ஆயிரக் கணக்கான பொன்னைக் கொட்டுதலையும்விட்டு, ஊரவர்கள் தீயினாற் காற்றால்நீரால இன்னன வேறு தெய்வச் செயலால் அல்லற்பட்டு அலமரும வேளைகளில் ஆன உதவிபுரிதல் கூடாதா?

இப்பொழுது யாழ்ப்பாண நாட்டிலே நேர்ந்த பேராபத்தைப் புள்ளி விபரங்களோடு அரசாங்கத்தாருக் கறிவிக்கும் கடமை பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் பொது நலப் பணியாளர்களுக்கும், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும், மாகாண அதிபதிக்கும், காரியாதிகாரிகளுக்கும், தலைமைக்காரர்களுக்கும் உரியது. இவர்கள் இன்ற்ற இன்னே இந்தக் கடமையைச் செவ்வனே செய்து யாழ்ப்பாணக் கமக்காரர்களுக்கு உயிர் கொடுத்து உதவிபுரிவார்கள் என்று திருக்கின்றோம்.

## யாழ். ஆரியதிராவிட பாஷாபி விருத்திச் சங்கம்

### ஆண்டுவிழாவும் பட்டமளிப்பும்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் 29 வது ஆண்டு நிறைவு விழா நேற்று மாலை 3 மணியளவிலே வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது. தலைமை வகிக்க இருந்த திரு. சு. நடேச பிள்ளை அவர்கள் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தால் வரமுடியாதபடியால யோகி உயர்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள் தலைமை வகித்துப் பட்டமளிப்புப் பேருரையும் நிகழ்த்தினார்கள். யோகிகள் பகவத்கீதையின் மகத்துவத்தைப் பாராட்டிப் பேசிப் பட்டம் பெறுவோரின் விசேட கல்வித் திறமைகளை எடுத்துரைத்தார்.

பண்டிதமணி பிரமஸ்ரீ. க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார், பண்டிதர் திரு வ. பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளை இம் மூவரும் புலவர்மணிப் பட்டத்தைப் பெற்று நன்றி உரை கூறினர்.

1952 - ம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சைகளிலே சித்தியெய்தியவர்களுக்குத் தராதரப் பத்திரங்கள் வழங்கப்பெற்றன.

காரியதரிசி திரு. அ. சரவணமுத்து அவர்கள யோகிகளின தமிழ்த் தொண்டையும் மொழியபிமானத்தையும் பாராட்டிப் பேசி நன்றி கூறினர்.

# ஒழுக்க இயலின் இன்றியமையாமை

## மனித வர்க்கம் வளர வழி!

### அரசியல்

இருபதாம் நூற்றாண்டின் நடுவாகிய இக்காலப் பகுதி, பொதுவாக உலக சரித்திரத்திலும், சிறப்பாக நமது இந்திய நாட்டின் வரலாற்றிலும் பல அம்சங்களில் முதன்மை வாய்ந்ததாகும். பல நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்த கருத்துக்களும் கொள்கைகளும புரட்சிகரமான மாறுதல்களை அடைந்து வருகின்றன. அரசியல், சமூகம், சமயம் இலக்கியம் முதலிய துறைகள் அனைத்திலும் தலைகீழான மாற்றங்கள் தோன்றியுள்ளன. "மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்ற கொள்கை பெரும்பாலும் மறைந்து, குடியரசு பல தேசங்களிலும் அமைந்து வருகிறது. வல்லரசும் சாம்ராஜ்யமும, ஏகதேச் சாதிகாரமும் தகர்ந்துவிடுகின்றன. ஏழை, அடிமை எனும் நிலைகளமாறி மக்கள் அனைவரும் சரிநிகர் சமானம் என்ற அடிப்படையில் ஒரு புதிய அரசியலமைப்பை உலகமெங்கும் நிறுவுவதற்கான முயற்சி எல்லா நாடுகளிலும தீவிரமாக மேற்கொள்ளபபட்டு வருகிறது.

— செந்தமிழ் —

### சமூகம்

சமூக அமைப்பை நோக்குமிடத்து சாதி, குலம், குடிபபிறப்பு, ஆசாரம், உயர்வு, தாழ்வு, தீண்டாமை முதலிய பழங் கொள்கைகள் நலிவுற்று சமத்வம், சகோதரத்வம், சமபந்திபோஜனம், கலப்பு விவாகம், மறுமணம் முதலிய புதுக்கொள்கைகள் சக்தி பெற்று வருகின்றன.

### சமயம்

சமயத்துறையிலும் கோயில் [illegible] திரு விழா அனைத்தும் பொருளற்றவை என்றும் அவை பேதைமைக்கும் அனுசாரத்திற்கும், வகுப்புணர்ச்சிக்கும் புகலிடமாகவுள்ளன என்றும் மக்களில் ஒரு பெரிய இனம் கருதி வருகிறது.

### இலக்கியம்

இலக்கிய உலகில் பழைய இலக்கியங்கள் புதிய நோக்கோடு ஆராயப்படுகின்றன தற்காலக் கொள்கைகளுக்குப் பொருந்தாத இலக்கியங்களையும், புராண இதிகாசங்களையும் இக்காலப் பேனா வீரர்கள் கடுமையாகத் தாக்கி அழிக்கக் கங்கணங் கட்டியுள்ளனர். அரசரையும அமைச்சரையுஞ் செல்வந்தர்களையும் கதாநாயகர்களாகக் கொண்டு, கற்பனையும் புனைந்துரையும் கலந்து பண்டிதர்களாகப் பாடியகாலம மலையேறிவிட்டது. பாட்டாளி மக்களையும், பரம ஏழைகளையும பாத்திரராகக் கொண்டு அவரது வாழ்க்கைகளை உள்ளவாறு பண்டிதரேயன்றிப் பாமரரும் கற்கும் வகையில், எளிய முறையில சித்திரிக்கும இலக்கியங்களே இக்காலத்தில விரும்பப்படுகின்றன.

### ஒழுக்கங் குன்றுதலின் காரணங்கள்

#### இளைஞர்களின் உணர்ச்சிப்பெருக்கு

இத்தகைய புரட்சி இயக்கங்கள் முன்னின்று நடத்துகிறவர்கள பெரும்பாலும உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்களேயாவர். அயல் நாடுகளிலிருந்து வரும புத்தம் புதிய கொள்கைகள அவர் உள்ளத்தை மிக விரைவாகவும் அழுத்தமாகவும் பற்றிக்கொள்கின்றன. அக்கொள்கைகள நமது நாட்டிற்கு ஏற்குமா என்பதையும், ஏற்பனவாயின் அவற்றை நடைமுறையில் கொண்டுவருதற்குரிய வழிகள் யாவை என்பதையும் ஆர அமரச் சிந்திப்பதற்குமுனபுதானே அவர்கள் செயலில் குதித்து விடுகிறார்கள். அப்பொழுது காரியசித்திக்கு எந்தவழி எளிதாகத் தோன்றுகிறதோ அதனை மேற்கொள்ள அவர்கள் தயங்குவதில்லை. இதனால் ஒழுக்கத்தின் வரம்புகள் மீறவும் சிதைக்கவும்படுகின்றன.

## யாழ்ப்பாணத்துக்குக் குழாய் நீர் வசதி

யாழ்ப்பாண நகருக்குக் குழாய் நீர் வசதியமைப்பதற்கு வேண்டிய ஒழுங்கு செய்ய அரசாங்கப் பகிரங்க வேலைப் பகுதியார் தொடங்கிவிட்டனர் என அறிய வருகின்றது. இதற்கு மத்திய அரசாங்கம் வேண்டிய பண உதவி செய்கின்றது. இத்திட்டத்தின்படி நாளொன்றுக்கு 350,000 கலன் தண்ணீர் வழங்கப்பெறும்.

### சுதந்திரம் பெற்ற புது ஆவேசம்

தற்காலத்தில் நமது நாட்டில் ஒழுக்கத்தைப்பற்றிய மதிப்புக் குறைந்திருப்பதற்கு வேறு காரணங்களும் உண்டு, சுமார் இருநூறு ஆண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அல்லலுற்ற மக்கள் இப்பொழுது ஐந்தாண்டுகளாகத் தான் விடுதலைபெற்றுச் சுதந்திரமாய் வாழ்ந்து வருகின்றனர். சுதந்திரம் பெற்ற புது ஆவேசத்தில் அவர்களில பலரும் கட்டவிழ்த்துவிட்ட இளங் காளைகள் போன்று ஒழுக்க நெறிகளைப் பொருட்படுத்தாமல் மனம்போன போக்கில் சென்றுவிடுகின்றனர்.

### பிற நாட்டார் தொடர்பு

மூன்றாவதாக நாம் இன்று உலகிலுள்ள பல தேசத்தவரோடும் கல்வி, தொழில், வியாபாரம், அரசியல் முதலிய வதுக்களால நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்து வருகிறோம். நம மக்கள அயல் நாடுகளில் சென்று தங்குகின்றனர்; அயல் நாட்டவர் இங்கு வந்து நம்மிடையே வாழ்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவகையான நடை, உடை, பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள் இருந்து வருகின்றன. இவ் அந்நிய நாட்டாரது தொடர்பால் நம் நாட்டுப் பாரம்பரை ஒழுக்கங்கள் உறுதி தலைந்து நெகிழ்ச்சி யடைகின்றன.

### ஒழுக்கத்தின் அவசியம்

மேற்கூறிய காரணங்களால் நம் முன்னோர்கள் நெடுங்காலமாக அரிதின் முயன்று ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைத்த நாகரிக மாளிகை அடியோடு தகர்ந்துவிடும் போல் தோன்றுகிறது. ஒழுக்கம் தளர்ச்சியுறும்போது காட்டு விலங்குகளினிடையே காணப்படும "பலவான் ஜயவான்" (Might is right) என்னும் விதியே எங்கும நிலவும் என்பதில் ஐயமில்லை. மனித சமூகத்திற்கு இதனினும் இழிந்த நிலை வேறு என்ன இருக்கிறது? ஒழுக்க நெறிகளை மக்கள் பேணிப் போற்றுதல் எக்காலத்திற்கும் அவசியமேயாயினும் அரசியல், சமூகத்துறைகளில் ஏற்பட்ட கொந்தளிப்பால் பழைய நிலைமைகள மாறிப் புதிய கருத்துக்களுங் கொள்கைகளும உருவாகும் இவ் வேளையில் ஒழுகத்தின் இயல்புகளைச் சிந்திப்பதும் அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதற்கான உறுதியை மேற்கொள்வதும் இன்றியமையாதனவாம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்கருதாப் பணியை இறைவன் விரும்புகிறான்

## உயர்திரு. சுத்தானந்த யோகிகள் உபதேசம்

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு.T.ஜெயரத்தினம் அவர்கள் தலைமைவகிக்க திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் வரவேற்புரை கூறும்பொழுது சுவாமி அவர்கள் சுப்பிரமணிய பாரதியைப்போன்ற மகாகவிமாத்திரமாகாது யோகியுமாயினாரென்றும், இரு புலவர்மணிகள் தோன்றிப் பலகாலம் பாலைவனமாயிருந்த இலங்கையிலே தமிழ் மழை பொழிந்தார்களென்றும் புகழ்ந்து பேசினர்.

சுவாமி அவர்கள் பேசும்பொழுது எனக்கு அளித்த வரவேற்பு சிவபெருமானுக்கு அளித்த வரவேற்பாகும். உலகமே எனது ஆச்சிரமம். உலக மக்களே என் உறவினர். பயன்கருதாப் பணியே என் வழிபாடு. உலகிலுள்ள ஒவ்வொருவரும் மனித நிலைமையிலிருந்து உயர்ந்து தெய்வ நிலைமையை எய்த வேண்டும். உலகம் அறியாமையில் மூழ்கியிராமல் அறிவுப்பணி செய்தலே எனது வேலை. இதற்காகவே வெளியில் வந்திருக்கின்றேன். தமிழின் இன்றைய நிலைமையை நோக்கி அது ஓங்கி வளரும்பொருட்டு ஆக்கப் பணி செய்ய வேண்டும். பிறமொழியை இகழாது தமிழ்மொழியை வளர்க்க வேண்டும். ஆங்கிலம் உலகமொழியானதற்குக் காரணம் இதுவாகும். பிறமொழிகளிலுள்ள நல்லன எல்லாம் தமிழிலே தருதல் வேண்டும். விஞ்ஞானம் தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும்.

எங்கள் நாடு அருட் செல்வம் மிகுந்த நாடு. ஐரோப்பா யுத்த ஆயத்தஞ் செய்கின்றது. இதனால் ஆசியாவையும் அபாயம் அணுகுகின்றது. அணுக்குண்டு யுத்தம் ஆயத்தமாகின்றது. தமிழ்நாடுதான் உலகத்தை இந் நிலைமையிலிருந்து காக்க வேண்டும். தமிழ்த் தூதர்களை அனுப்பித் தமிழையும் பரப்பிச் சமாதானத்தையுங் காக்க வேண்டும். அணுக்குண்டைத் தடுக்க எம்மிடம் அருட்சக்தியுண்டு. ஞானக்கண் திறந்து எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க என்ற ஒலி எங்கும் பரப்ப வேண்டும். இதற்கு யோக சக்தியை விளக்கிச் சமாதானத்தை நிலவச் செய்தல் வேண்டும்.

வேதாகமங்கள் வேறென எண்ணாது போற்ற வேண்டும். வேதம் அறிவைத்தர ஆகமம் பதியைத் தரும். சமரோக்கே சைவச் சிறப்பு மனக்குரங்கை அடக்கக் காலையிலெழுந்து தியானஞ் செய்யுங்கள் என்று கூறினர்.

### பண்ணாகம்

பண்ணாகம் மெய்கண்டான்பாடசாலையிலே முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் நடந்த வரவேற்புக் கூட்டத்திலே சுவாமிகள் பேசும்பொழுது. "நா" எவ்வித சிற்றின்பத்தை அநுபவித்தாலும் அது துன்பமாக மறுநாள் மாறுகின்றது. அமிர்தமாய்த்தோற்றுவது நஞ்சாகவும் நஞ்சாய்த் தோற்றுவது அமிர்தமாகவும் மாறுகின்றன.

அப்பர் சுவாமிகள் உலக தீர்க்கதரிசிகளுள்ளே தலை சிறந்தவர். அவருடைய மொழிகளைப் பின்பற்றியொழுகினால் உலகம் சுவர்க்கமாய்விடும்! இறை நம்பிக்கை இன்று மிகக் குறைவாயிருக்கின்றது? மாணவர் பள்ளிக்கூடஞ் செல்லும்பொழுது பட (சினிமா) நடிகர்களை மனத்தில் நினைத்துச் செல்கிறார்கள். வெறும் வீரப்பேச்சால் மதத்தைப் பரப்ப முடியாது! செயலிலே செய்ய வேண்டும். ஆயிரம் பேர் வாருங்கள்! ஒரு வருடத்தில் உலகம் முழுதும் சைவமதம் செழிக்கச்செய்வோம்!! என்று கூறி மதுவை ஒழித்துத் தீண்டாமையை நீக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

முதலியார் சின்னத்தம்பி அவர்கள் சுவாமிகளின் மொழிவழியே ஒழுகவேண்டுமென்று தமது நிறைவுரையிற் கூறினர்.

### தேவரையாளி

பரித்தித்துறை தேவரையாளி சைவ வித்தியாசாலையிலே சுவாமிகள் பேசும்பொழுது தமிழ்நாட்டிலே பிறந்து தமிழ் பேசும் மக்கள் யாவருந் தமிழரே! அங்கே சாதிப் பிரிவுக்கிடமில்லை. மதப்பிணக்கு உண்டாக மாட்டாது என்று கூறினர்.

### காங்கேசன்துறை

ஸ்ரீ சுத்தானந்த பாரதி யவர்கள் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியிலே பேசும்பொழுது யோகியவர்கள், தமிழன் என்பது ஒரு மனித குலமென்றும், அதில் சாதவேற்றுமை காட்டக்கூடாதென்றும் நன்கு அறிவுறுத்தினர். ஐரோப்பியன், சீனன், ஜப்பானியன் என்பதுபோல, தமிழன் என்பதும் - ஒரே சாதி. சாதிவிகற்பம் ஒழியத் தமிழையும் சைவத்தையும் வளருங்கள்! தமிழர் கலை. சிற்பம், காவியம், ஓவியம முதலியவற்றில் சிறந்து விளங்கினார்களென்பதற்குப் பல அத்தாட்சிகள் இன்றும் நம் நாட்டில் மாத்திரமன்றி ஜப்பானிலும், ஐரோப்பிய நாடுகளிலும் உள்ளன! தமிழன் புத்துயிர்பெற்று மறுமலர்ச்சி எய்தி எல்லோரும் இன்பமாகவும், நன்றாகவும் இருக்கவேண்டுமென்று கூறினர்.

### வல்லுவெட்டித்துறை

வல்லுவெட்டித்துறையிற்பேசும்பொழுது, கடவுள் சுத்த சக்தியாயிருக்கிறார். அவர் மனம் வாக்கு காயங்கள் பரிசுத்த மாயினோருடைய உள்ளங்களிலே இருப்பார். நாம் அநுட்டானச் சைவராய் வாழவேண்டும். வாயாற் சைவம் பேசிக்கொண்டு மது மாமிசங்களை உட்கொள்ளும் போலிச் சைவராய் வாழுதல் கூடாது! உடம்பெனும் கோயிலிலே பக்தி என்னுந் தீபத்தை ஏற்றி உணர்ச்சி என்னும் மலர்களால் அருச்சியுங்கள்!! நாஸ்திகம் பேசுவோர் தங்கள் பாட்டிற் பேசிக் கொள்ள விடுங்கள்!!!

யோக சாதனத்தால் பரிசுத்தமடையலாம். யோகசாதனத்துக்கு உருத்திராக்கம் அங்கமாயிருக்கின்றது. ஆகையினாலே ஒவ்வொருவரும் கழுத்தில் உருத்திராக்கம அணிதல்வேண்டும் என்றுகூறினர்.

### உரும்பராய்

உரும்பராய் ஞானோதய வாசிகசாலையில் காந்தியடிகளின் உருவச் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் ஒரு கையில திருக்குறளையும் மறுகையில் காந்தியடிகளின் சரித்திரத்தையும் வைத்துப் பார்த்தால காந்தியடிகளின் சரித்திரம் திருக்குறளின் விளக்கமாயிருத்தலைக் காணலாம். உரிமையையும் கடமையையும் ஒன்றுபடுத்தி அவர் சேவை செய்தார். வீட்டுக் கடமை தேசக் கடமை என்ற இரு கடமைகளுள் அவர் தேசக் கடமையை மேலானதாகக் கொண்டு சேவை செய்தார். சிறிதும் வழுவாது சமய பக்தியை மேற்கொண்டொழுகினர். ஆசியாவின் நான்கு மதங்களையும் நனகு மதித்துத் தேசத் தொண்டுக்குத் தெய்வபக்தியே சிறந்ததென விளக்கினர். தாம் பெற்ற விசேடசக்திக்கு பிரமசரியமே காரணமென்பதைக் காந்தியடிகள் வற்புறுத்தியிருக்கிறாரென்று கூறினர்.

### இராமநாதன் கல்லூரி

இராமநாதன் கல்லூரியில் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி.N.P. பிள்ளை அவர்களால் வரவேற்கப்பெற்றார். அங்கே பேசும்பொழுது சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் அவர் செய்த அரிய தொண்டுகளைப் பாராட்டிச் சைவத்துக்கும் தமிழுக்கும் அவர் செய்த தொண்டு மிக உயர்ந்தது என்றும் அது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுக்குப்பின் சைவத்தையும் தமிழையும் காப்பாற்றிய பெருமை வாய்ந்ததென்றும் அவற்றை வளர்க்க அப்பெரியார் அமைத்த அறநிலையங்கள் தமிழ் நாட்டிலே சிறந்து விளங்குகின்றனவென்றும் கூறி இறைவன் இவ்வாறு செய்ய உறுதுணையாயிருந்த ஸ்ரீமதி இராமநாதன் அம்மையாரை வாழ்த்தினர்.

### குரும்பசிட்டி

குரும்பசிட்டி சன்மார்க்க சபையிலே தபால் மந்திரி திரு நடேசன் அவர்கள் தலைமையில் நடந்த வரவேற்புக் கூட்டத்திலே பேசும்பொழுது தமிழ்மொழி தருகின்ற இன்பம் மற்றெந்த மொழியிலும் பெறமுடியாத தனிச் சிறப்புவாய்ந்தது. இரசாயனம் முதலியவற்றுக்கு வேண்டிய சொற்களைத் தமிழிலே ஆக்கவேண்டும், தமிழ்ப் பண்பாடு தனிச் சிறப்பு வாய்ந்தது, தமிழ்மொழி அன்பையும் அன்புப் பணியையும் வளர்ப்பது, சித்தாந்த உண்மைகளைத் தெளிவாகக் கூறுவதும் தமிழ்மொழியே, ஆகையினாலே ஒவ்வொரு சைவனும் சைவ சமயத்தைப் படிக்க வேண்டும். படித்தபடி ஒழுக வேண்டும, அவற்றை உலகெங்கும் பரப்ப வேண்டும், தொண்டர் பலர் தோன்ற வேண்டும், சித்தாந்த உண்மைகளை அவர்கள் யோக நெறியால் உலகுக்கு விளக்கவேண்டும். சீவன் முத்தர்கள் தோன்ற வேண்டும. என்று கூறினர்.

### ஈழகேசரி

ஈழகேசரி நிலையத்திலே பேசும்பொழுது மதுபானத்தையும் தீண்டாமையையும் ஒழிக்கும்படி மதி மொழிகூறி ஈழகேசரி இலக்கியத் துறை கலைத்துறைகளில் ஆற்றிவரும் பணியைப் புகழ்ந்து அதின இதழாய் வரும் நாளைத் தாம் எதிர்பார்ப்பதாக வாழ்த்தினர்.

❧

---

விளம்பரஞ் செய்தல்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்

வழக்காளி

இல. 9067 எதிராக

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, என். எஸ். சேதுராசா செட்டியின் பெண் நாகமுத்து காலம் சென்ற என் எஸ். சேதுராசா செட்டியின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும்

எதிராளி.

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில் 9067 - ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி)மாதம் 17-ந் திகதி(17-12-52) புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 26,500/= - ம், இதில் ரூபாய் 20,000/=க்கு 1 - 8 - 52 திகதி தொடக்கம 14-10-52 திகதி வரைக்கும் 100 க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 400/=

### காணியின விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "புங்கு நின்ற உப்புக்குளமும் புங்கு நின்ற உப்புக் குளங்கரையும் மறு பிரிவுகளும்"நெற்பரப்பு நாலு(4-ம்) குளி $10\frac{3}{4}$ ம் இதில் கிழக்குப் பக்கமாக சிந்தமாக நெற்பரப்பு இரண்டு (2-ம்) குளி $5\frac{3}{8}$ ம் இரு கடைக் கட்டிடங்களும் மற்றும் வீடுகளும் மற்றும் கட்டப்படும் கட்டிடங்களும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு என். எஸ். சேதுராசா செட்டியின் உருமைக்காறருக்குரிய ஆதனமும் கணபதிப்பிள்ளை பத்மநாதனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு இக்காணிக்கும் மறுகாணிகளுக்கும் பொதுவாக விடப்பட்ட ஒழுங்கை, மேற்கு என்.எஸ். சேதுராசாசெட்டியின் உருமைக்காறருக்குரிய ஆதனம், தெறகு ஸ்ரான்லி றோட்டு. இதடங்கலும்.

முற்பதிவு D 188/23

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை
9—11—1952.

M. 180 2—12—52.

## புதிய இரண்டு ரூபா நோட்டுகள்

புதிய இரண்டு ரூபா நோட்டுகள் அண்மையில் வெளிவருமென இலங்கை மத்திய வங்கியார் அறியத் தருகின்றனர். இவற்றுடன் பழைய நோட்டுகளும் முன்னர்போல் உதவும்.

## மரம் வீழ்ந்து உயிர்ச்சேதம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை அடித்த புயற் காற்றினால் விழுந்த பனையாற் றுக்குண்டு வதிரியென்னும் கிராமத்திலே ஒரு கர்ப்பவதியும் ஒரு வயது சென்ற பெண்ணும் இறந்ததாக அறிகின்றோம்.

## விளம்பரம்

### உடுப்பிட்டிக்கிராமச்சங்கம்

ஷை சங்கத்தைச் சேர்ந்த கிராமங்களில் அரசினர் மான்யறோட்டு வேலைகளுக்கு1952ம்ஆ மார்கழிமீ 12 ந் உ காலை 9 மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப்பணமாக ரூபா ஐம்பது, 1952 ம் ஆ மார்கழிமீ 10 ந் உ மாலை 1 மணிக்கு முன் இக் கந்தோரில் கட்டியவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் என்னால் வழக்கப்படும்.

மேலும் றோட்டு வேலைகளின் விபரங்களைச் சங்கக் கந்தோரில் வந்து என்னிடம் அறியலாம்.

வடபகுதி ஸ்தலஸ்தாபன அதிபர் கந்தோரில் பதிந்த நாமாவளிகளுக்கே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இ. தா. சிவகுருநாதன்
ஷை சங்கத் தலைவர்

உடுப்பிட்டி
1—12—1952.

M. 183 2, 5, 9—12—52.

---

## பிரகடனம்:

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர் : ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00,

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

வில்லிபாரதம் - புட்பயாத்திரைச்சருக்கம்: பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளைஎழுதிய நுண்பொருளவிளக்கவிரிவுரை, நூலாசிரியர்வரலாறுமுதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S.S.C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2–ம்பதிப்பு) விலை ரூ 1-25ச.

அரிச்சந்திரபுராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு. நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் : மேற்படி பண்டிதர்எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷைபண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1·00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றுயுள்ளது. விலை ச 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

புலியூர் (யமக)அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply : to PANDIT V. T, SAMBANDHAN Vannarponnai, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்

# சுசீலாவின் காதல்

யாழ். நகரமண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆண்டு
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை

சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=o=

தந்தி: "JEWELLERS".
போன்: 161.

ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


உ
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## வெளியிட்ட நூல்கள்

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| கந்தபுராணம் (செய்யுள்) | ... | 8 | — |
| கந்தபுராணம் வசனம் | ... | 5 | — |
| திருவிளையாடற் புராணம் செய்யுள் | ... | 3 | 50 |
| திருவிளையாடற் புராணம் வசனம் | ... | 2 | — |
| பாரதம் ஆதி பருவம் உரை | ... | 3 | 50 |
| சேது புராணம் | ... | 3 | — |
| இராமாயணம்—பாலகாண்டம் (குறிப்புரை) | | 2 | 50 |
| நன்னூற் காண்டிகையுரை | ... | 3 | 50 |
| „ விருத்தியுரை | ... | 3 | 50 |
| அருட்பா | ... | 1 | 75 |
| சைவசமய நெறியுரை | ... | 1 | 25 |
| பெரியபுராண வசனம் | ... | 2 | 50 |
| பெரியபுராணம் செய்யுள் | ... | 5 | — |
| நாவலர் சரித்திரம் | ... | 1 | 25 |
| இலக்கணச் சுருக்கம் | ... | 1 | — |
| சைவ வினாவிடை (1) | ... | | 20 |
| சைவ வினாவிடை (2) | ... | | 65 |
| முதலாம் பாலபாடம் | ... | | 20 |
| இரண்டாம் பாலபாடம் | ... | | 35 |
| மூன்றாம் பாலபாடம் | ... | | 65 |
| நான்காம் பாலபாடம் | ... | 1 | 75 |
| சிவாலய தரிசன விதி | ... | | 20 |
| அபிராமியந்தாதி யுரை | ... | | 25 |
| திருக்குறள் உரை | ... | 5 | — |
| திருக்கோவையார் உரை | ... | 3 | — |
| கொலைமறுத்தலாதி | ... | 1 | 50 |
| திருமுருகாற்றுப்படை | ... | | 25 |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | ... | 1 | 25 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | ... | | 25 |
| நித்தியகரும விதி | ... | | 15 |
| பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு | | | 15 |
| கந்தரலங்காரம், கந்தரனுபூதி | ... | | 15 |
| மதுரை அறுபத்துநான்கு திருவிளையாடற் போற்றிக் கலி வெண்பா | ... | | 05 |
| விநாயக ரகவல் | ... | | 10 |
| சரஸ்வதி யந்தாதி | ... | | 05 |
| துண்டிவினாயகர் திருவருட்பா | ... | | 05 |
| விநாயககவசம், சிவகவசம், சக்திகவசம், சரசுவதிதோத்திரம் இலக்குமி தோத்திரம் | | | 10 |

இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.  மனேஜர், சைவப்பிரகாசயந்திரசாலை.

சமயப் பிரசாரம்:

## ஆறுமுக நாவலர் குருபூசை

=o=

நாள்: நந்தன கார்த்திகை உஉ-உ (8—12—52 திங்கட்கிழமை.

இடம்: சைவ பரிபாலன சபை சைவாச்சிரம நாவலர்மண்டபம்

நிகழ்ச்சிகள்:

முற்பகல் 10 — பிற்பகல் 2

கடவுளாராதனை, தமிழ்மறை ஓதுதல், நாவலர் சரித்திரம் படித்தல், மாகேசுரபூசை.

:: இரவு 6-30 ::
தமிழ்மறையோதலும் பிரசங்கமும்

தலைவர் திரு. இ. சிவகுருநாதர்.

தமிழ் மறையோதல்:

திரு. சொ. பசுபதிநாதன்
„ ச. சங்கரப்பிள்ளை
„ சி. கனகசபை.

நாவலர் சரித்திரப் பிரசங்கம்:

திரு. மு. ஞானப்பிரகாசம் B.A.B.Sc
„ முதலியார் C. முத்துத்தம்பி
„ பொ. கைலாசபதி. [கருணாகரர்?]

தமிழன்பர்களும் சைவாபிமானிகளும் சமுகந்தருக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
1—12—52.
M 182 2-12


## விற்பனவு

யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்குச் சந்தியில் ஒரு கல்வீடும் வளவும் 4¼ பரப்புடன் விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

(C/o. இந்துசாதனம்)

M. 179 28, 2, 5.


## சாராயம் ஒழிந்தால் நிலைமை சீரடையும்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

மதுவருந்துவோர் நிலைமையால் விளக்கியும், திருக்குறள், இராமாயணம் முதலிய நூல்களிலிருந்து எடுத்துக் காட்டுகள் எடுத்து விளக்கியும் ஆர்வம் மிகுந்த இன்னுரைகளாலும ஓசை ஒலிக்கும பாக்களாலும் கேட்டோர் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட அரிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.

20-12-52-ல் நடக்கவிருக்கின்ற சாராயமீக்க ஊக்கெடுப்பை நடத்துவதற்கு திரு. V. கனகசபை அவர்கள் தலைவராக திரு. K. பேரம்பலம் அவர்கள் காரியதரிசியாகப் பதினொரு அங்கத்தவருள்ள ஒரு நிருவாக சபை அமைக்கப்பெற்றது.

[illegible]
விளம்பரஞ் செய்தல்


திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ரூணிமார்க் ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2  ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி

# தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகராவமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதிஅற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும.

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

## குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனம்)

M. 16, 25-4-52—25-10-52.



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசா தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. December 2 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org